ஓம்

தருமசீலன்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

(All Rights Reserved.)

11 AUG 1924

புத்தகம் 7	இரத்தாட்சி௵ வைகாசி௴ 1924௵ மேமீ	சஞ்சிகை 2.

நீதிச் செய்யுட் சிந்தாமணி.

உடம்பைப் பேணுவார் அறத்தைக் கேளாரெனல்.

"இழுதன்ன வெண்ணிணத்த செந்தடிக்கே யெட்டைப்பட்
டிரும்பிற் போர்த்த
பழுதெண்ணும் வன்மனத்தா ரோட்டைமரச் செவியர்
கேளார் பால்போன்
றொழுகி யமுதூறு நல்லறத்தை யோர்கிலருஞ்
செய்கோட் டக்குக்
கழுகுண்ணு வள்ளூர மேசுமந்து புள்ளிற்கே
புறஞ்செய் கின்றார்."

(இ-ள்.) வெண்ணெயைப்போன்ற வெண்ணிறம் பொருந்திய கொழுப்போடு கூடிய சிவந்த தசையைப் பெறவேண்டுமென்றே (அதன் பொருட்டுப் பிரயாசைப்பட்டு) இளைத்து, (அத்தசையை உடம்பில் வளர்த்து) அதனையே சுமந்து, அத்தசையாற் பொதிந்த கொட்டிலாகிய உடம்பிற்குக் காவல் செய்கின்றவர்கள், பால் போன்றொழுகி அமுதூறுகின்ற நல்ல அறத்தை அறியாதவர்களாய்க் கழுகுண்ணும்படி அந்தக் கழுகாகிய பறவைக்கே காத்து அவ்வுடம்பைக் கொடுப்பவராவார்கள். இவ்வாறு குற்றத்தையே நினைக்கின்றதும், இரும்பாற் போர்க்கப்பட்டதுமாகிய வலிய மனத்தையுடையவர்கள், ஒட்டைமரச் செவியராய் அறத்தைக் கேளார்" என்பதாம்.

தசையை வளர்ப்பதற்கே முயற்சிசெய்து இளைத்து உடம்பை வளர்த்துத் தாங்கிக் காத்துத் திரிபவர், அதனைக் கழுகுண்ண அதற்குக் கொடுத்தற்கே காவல் செய்பவராவர்; இத்தகைய பழுதெண்ணும் மனத்தார் அறத்தைக் கேளாரென்பது இதன் கருத்து. ஆகவே, உடம்பை வளர்த்தலால் பயனில்லை, அதனை வாட்டி அறத்தைக் கைக்கொள்ளுதலே பயனுடைத்தாம் என்பது இதனாற் பெறப்படும்.

இழுது-வெண்ணெய். தடி-தசை. எட்டைப்பட்டு-இளைத்து. ஒட்டைமரம்-பொந்துள்ளமரம். கோட்டத்துக்கு என்பது அத்துச்சாரியை குறைந்து கோட்டக்கு எனவந்தது. வள்ளூரம்-ஊன். "புறஞ் செய்கின்றார்" என்பது இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. புறஞ்செய்தல்-காத்தல். கோட்டம்-கொட்டில், இடம். ஒட்டைமரச் செவியர்-மரப்பொந்துபோல உணர்ச்சியற்ற செவியர்.

(சீவகசிந்தாமணி 1552)

தருமசீலன்.

இரத்தாட்சிஹூ வைகாசிமீ.

"தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை"

இதன் பொருள்:—"தாயின்-(ஒருவனுக்குத் தன்னைப்பெற்ற) தாயைக் காட்டினும், சிறந்து-சிறந்ததாகி, (அன்புடன் தொழத்தக்க) ஒரு கோயிலும் இல்லை-ஒரு ஆலயமும் இல்லை" என்பதாம்.

தாயானவள் ஒரு பிள்ளையைப் பெற்றவுடன், அதற்கு நன்மை தீமைகளை உணரும் பருவம் வரும் வரையில் அதனைத் தன் உயிரினும் சிறந்ததாக நினைத்துப் பாதுகாத்து வருகின்றாள். ஈ, எறும்பும் அப்பிள்ளையின் மீதேற அவள் சம்மதிப்பதில்லை. அவளுடைய பாதுகாப்பு இல்லாவிடில் அப்பிள்ளை குழந்தைப் பருவத்தில் ஊனுபெற்று வளர்ச்சியடைவது துர்லபம். இன்னும் அம்மாதா உயிர்நக்கத்தை விடுத்தும் அக்குழந்தையைப் பாதுகாக்கின்றாள். பிள்ளைக்கு நன்மை தீமைகளை உணரும் பருவம் வந்த பின்னருங்கூட அவள் அப்புத்திரன்மீது அன்புடையவளா யிருக்கின்றாள். ஆகவே, பிள்ளைக்கு அறியாப்பருவம் நீங்கும் வரையில் அவளே சகல விதத்திலும் கர்த்தாவா யிருக்கிறாள். பின்னரும் அவனைப் போஷித்து வருகின்றாள். இவ்வாறு இரண்டு சமயங்களிலும் அவள் அப்பிள்ளையை ஆதரித்து வருவதால் அவன் இளமையில் தாயைத் தவிர வேறொரு ஆதாரமும் தனக்கிருப்பதாக அறியான். அறியும் பருவம் வந்து தெய்வம் இன்னது, தந்தை இன்னவர், நன்மை தீமை இன்னவை என்றுணர்ந்து நமக்குத் தந்தையாலும் தெய்வத்தாலும் அனுகூல முண்டென்பதைத் தெரிந்துகொண்ட பின்னரும் கூட, தாய் தன்னை அதுவரை ஆதரித்து அவ்வனுகூலங்களை அறிந்து கொள்ளும்படி செய்ததை முன்னிட்டு அவளையே தனக்கு எல்லா விதத்திலும் முக்கிய கர்த்தாவாக நினைக்கக்கூடியவனா யிருக்கிறான். "ஆலயந்தொழுவது சாலவுநன்று" என்று ஔவைப் பிராட்டியாரே இந்நூலிற் கூறியிருப்பினும், அவ்வாலயத் தொழுகையின் உயர்வை அறிந்து கொள்ளற்குத் தாயே பேருதவியா யிருப்பவளாதலின், இங்கு "தாயிற் சிறந்தொரு கோயிலு மில்லை" என்று கூறினார்.

2164258

இதனால் கோவிலைக் காட்டிலும் தாய் சிறந்தவளென்பதும், அவளை முக்கியமாக வணங்கிப் போற்றவேண்டுமென்பதும், தாயை வணங்காமல் ஆலயந் தொழுவதாற் பயனில்லையென்பதும் பெறப்படும். இதனால் தாயை மாத்திரம்தான் தொழவேண்டும் தெய்வாலயந் தொழ வேண்டியதில்லை யென்று தப்பர்த்தங்கொண்டு குதர்க்கம் செய்யலாகாது. தாயைச் சிறப்பித்தற்காக இங்ஙனம் கூறியதென்று கொள்ளவேண்டும். இதனை நன்றாக உற்று நோக்குமிடத்து, தாய் தெய்வத்தினும் சிறந்தவளென்பது ஐயமற விளங்கும். ஆகவே இந்நீதியைக் கடைப்பிடித்து எல்லோரும் தாயைத் தொழுது போற்றவேண்டும். அங்ஙனம் செய்வார் இருமையிலும் இன்பெய்துவார். இக்காலத்தில் மேல்நாட்டுக் கலைகற்றுப் புதிய நாகரீகம்படித்த சில புத்திமான்கள், தாய் தந்தையரை அவமதித்துத் துன்பத்திற் குட்படவும் செய்வதைப் பார்க்கிறோம். அவர்கள், நம்முடைய நீதி நூற்களைச் சிரத்தையுடன் படிக்காத காரணத்தினாலேயே இவ்விதம் செய்கின்றார்கள். அவர்கள் இந்நீதியைக் கடைப்பிடித்தொழுகுவாராயின் இம்மையிற் புகழும், மறுமையில் நற்கதியும் அடைவது திண்ணம்.

(திருவருட்சகாயம்.)

---

* கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்.)

கனந்தங்கிய சபைத்தலைவர் அவர்களே!
சபை வீற்றிருக்கும் கனவான்களே!!
கூட்டுறவுச் சகோதரர்களே!!!

ஸ்ரீமத் இராமாயணம் படிக்கப்படும் இடங்களிலே முன்னர் இருக்கும் வழக்கம் வாய்ந்த ஸ்ரீ ஆஞ்சநேயர்போலக் கூட்டுறவாளர் கூடிப்பேசும் இடங்களில் முன்னர் இருக்கும் வழக்கங்கொண்ட அடியேற்கு அதிர்ஷ்டவசத்தால் இன்று உங்கள் முன் நின்று சில கூறத்தக்க வசதிகிடைத்தது. அதுபற்றி அடியேன் பெருமகிழ்வெய்துகிறேன்

---

* இது கும்பகோணத்தில் (20—4—24) நடைபெற்ற கூட்டுறவாளர் நாளன்றுப் படிக்கப்பட்டது.

கூட்டுறவு முறையைப் பின்பற்றி உழைத்துவரும் பெருமை வாய்ந்த உங்களுக்கு ஒன்றற்கும் பற்ருத அடியேன் அம்முறையைப்பற்றிக் கூறுவது மகாபண்டிதர்க்குச் சிறுவனொருவன் "பால் வெண்ணிறமாயிருக்கும்; சர்க்கரை தித்திக்கும்" என்று கூறுவது போலாமே அன்றிப் புதுவதாயிருக்கமுடியாது. எனினும், உத்தரவை மறுத்தற்கு அஞ்சிக் கடமையை உணர்ந்து சிறிது கூறுவேன். வெறுப்பனவிலக்கி, உவப்பன உளங்கொளல் உடன் பிறப்பாளர்களாகிய உங்கள் கடன்மையாம்.

இத்தலைத்தொடர் "பண்டப்பிரிவினை, கொடுக்கல் வாங்கல், வீடமைத்துதவல், உழவினர்க்குதவல், தொழிலினர்க்குதவல், மொத்தக் கொள்வினை, மத்தியசங்கம், மேற்பார்வை பார்த்தல், விளைநிலமாக்கல், வித்தைபயிற்றல், விரித்துரையாடல், உலகொருங்கமைத்தல்" என்ற பலபிரிவுகளாக வகுத்துக் கூறப்படலாம். அடியேனும் இன்று அம்முறையிற் சிறிது கூறுவேன்.

முன்னுரை.

உலகிலே மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் இம்மையில் உண்டு, உடுத்து, உறைந்து, உபகாரியாயிருந்து; மறுமையில் ஆண்டவன் திருவருளுக்கு உரியராகவே தோன்றியிருத்தல் வேண்டும். அங்ஙனம் ஆதற்கு முதல் துணையாவது உடலே. "சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் வரைதல் வேண்டும்?" என்ற ஒரு பழமொழியும் இருக்கின்றது. இதிற் பயின்றுவரும் சுவர் என்பது மக்களது உடலைக்குறிப்பதாம்; சித்திரம் என்பது உலக நன்மையைக் குறிப்பதாம்; வரைதல் என்பது தொண்டுபுரிதலைக் குறிப்பதாம், இப்பொருளால் "உலகினர்க்குத் தொண்டுபுரியவே மக்களாவார் ஒவ்வொருவர்க்கும் ஆண்டவனால் உடல் தரப்பட்டது" என்பது புலனும். "அறஞ்செயத் துணை புரிதற்கே உடல் இருப்பது" என்று பொருள்படும் வடமொழித் தொடரும் இங்கே கவனிக்கத் தக்கது. இத்துணைப் பெருமைவாய்ந்த உடல் சோற்ருல் நிலை பெறுவது. "சோற்ருல் எடுத்தசுவர்" எனவரும் பழமொழியையும் நோக்குக. "உண்டிமுதற்றே உடலின் பிண்டம்" என்றும், "பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால் - நாழி அரிசிக்கே நாம்" என்றும் வருவனவும் அது.

பண்டப்பிரிவினை.

இத்தகைப் பெருந்துணையான உணவினைப் பெறுவது எல்லார்க்கும் எளியதொன்றன்று. எக்காரணம் கொண்டோ ஒருவர்

ணைகளைப் பலர் பார்க்கவேண்டிய நிலைமையிலேயே தற்காலம் உலகப்போக்குச் சென்றுகொண்டு வருகிறது. இந்நிலையில், சிற்சில இடங்களில் "வயிறு நிறைய உண்பதிலும், அரை நிறைய உடுப்பதிலுமாவது ஒவ்வொருவருக்கும் சுயேச்சை இருக்கவேண்டும்" என்ற ஆராய்ச்சி பிறக்கலாயிற்று. அந்த ஆராய்ச்சியின் பயனாக ஆங்காங்கு ஒருமனப்பட்ட பலர் ஒன்றுகூடித் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை மொத்தமாக முன்பணம் கொடுத்து வாங்கிச் சில்லறையாக முன்பணங் கொடுத்துப் பிரித்துக்கொள்வதை நல்லதொரு துறையாகக் கைக்கொள்ளலாயினர். இம்முறை இலகுவில் நிறைவேற்றக்கூடியதுபோலக் காணப்படினும் இஃது அத்துணை இலகுவில் நிறைவேற்றக் கூடிய தொன்றன்று என்பதையும், இதற்குப் பல உட்பகைகளும் வெளிப் பகைவர்களும் உண்டு என்பதையும், ஆனால் உலகவிநிதலைக்குக் கடைபோகத் துணை செய்யக் கூடியது இஃதொன்றே என்பதையும் கூட்டுறவாளர் மறத்தல் கூடாது.

இதற்குப் பகையாக முதலிற் கூறத்தகுந்தது இம்முறையில் நம்பிக்கைவைத்துச் சேர்ந்தவர்களிடத்திற் சேர்ந்து பண்டம் வாங்க மனம் இருந்தும் முன்பணம் கொடுக்கக் கையிற்பணமில்லாமையே. இதுவே பெரியதோர் உட்பகைமையாம். ஏனைய பகைவர்களைப் பற்றிக் கூறவேண்டிய இடம் இஃதன்று. ஆகலின், இவ்வியக்கம் வளரவேண்டுமானால் இம்முதற் பகைமைக்குத் தப்பி உறுதியாய் நம்பிக்கையுடன் தொடக்கத்திலேயே பெரும்பயன்களை எதிர்பாராமல் பொறுமையுடன் விடாது போற்றி வரல்வேண்டும்.

இங்ஙனம் வருங்கால் சேர்ந்தோர் எவரும் "எனக்கு எவ்வளவு மிகுதி; எனக்கு எவ்வளவு மிகுதி" என்று கணக்குப்பார்த்துக் கைப்பற்ற முயலலாகாது. அது மண்ணில் ஒரு விதையைப் புதைத்து அது முளைத்து வெளிவந்ததும் "எவ்வளவு வேர் விழுந்திருக்கின்றது; எவ்வளவு வேர் விழுந்திருக்கின்றது" என்று அடிக்கடி பிடுங்கிப் பார்க்கும் பைத்தியக்காரர் செயல்போலாம். இத்தகையினர் "நம்மால் வேற்றிடங்களில் வாங்கப்படும், பண்டங்களுக்கு அவற்றின் சொந்தக்காரர் நமக்கென ஏதேனும் 'மிகுதி' என்று சொல்லிக் கொடுக்கின்றனரா? இல்லையே. அவரது கணக்கைத் தான் பார்க்கமுடியுமா? முடியாதே. அங்ஙனமிருக்க இங்கே மாத்திரம் ஏன் இப்படி அவசரப்படல் வேண்டும்? இங்கே நமக்கென நமது பெயரால் 'இவ்வளவு மிகுதி' எனக் கணக்கு வைத்திருக்கி

ளூர்களே; கணக்குகளைத் தடையில்லாமற் பார்க்கத்தக்க வசதியுமிருக்கின்றதே. அவை போதாவோ? "வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பல்" என்பதுபோல எவ்வளவு வந்தாலும்தான் நமது குடும்பக்கப்பல் விழுங்கி விடுகின்றதே! இத்துறையிலாவது நம்மை அறியாமற் சிறிது மிருந்துவரலாகாதா?" என்று ஆராய்ந்தறிந்து "எல்லார்க்கும் ஒருவர்; ஒருவர்க்கெல்லாரும்" என்ற மகாமந்திரத்தைத் துணைக்கொண்டு நடை பெறுகின்றமையின் இம்முறை "நாமறியாமலே நமக்கு முதலாக்கும்" என்ற நம்பிக்கையுடன் நடந்துகொள்ளல்வேண்டும்.

இனிச்சிலர், இம்முறையில் எங்கேனும் சிறிது தவறுதல் நடந்துவிடினும், உடனே அன்னார் இம்முறையிற் சேர்ந்தவராயிருப்பின் "இதிற்சேர்ந்தால் ஏதேதோ நன்மை வந்துவிடும் என்று வாய்ப்பந்தர்ப் போட்டார்கள்; ஒரு நன்மையையுங் காணேம்" என்றும், சேராதவராயிருப்பின் "இது தவறான மனிதரால் நடத்தப்படுகிறது; அதனால்தான் இக்குறைபாடுகள் தோன்றுகின்றன" என்றும் கூறிப் புறம் பழிக்கின்றனர். இத்தகைப்பெரியார் சிறிது தயைசெய்து, சேர்ந்தவராயிருப்பின் "இக்குறை நம்மால் நம்பப்பட்டவாது செயலால் நேர்ந்ததாகக் கருதப்படுகிறது; 'தெளிந்தான்கண் ஐயுறவு தீரா இடும்பைதரும்' என்பது மறைமொழி; ஆகலின், நாம் நடத்திப்பார்ப்போம்" என்று கருதி நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டும்; சேராதவராயிருப்பின் "இம்முறை நமது நாட்டவரால் தொடங்கப்பட்டது; இதில் வரும் பெருமை சிறுமைகளில் நமக்கும் பங்குண்டு; 'அழிவினவை நீக்கி ஆறுய்த்து அழிவின்கண் அல்லல் உழப்பதாம் நட்பு' என்பது பெரியார்வாக்கு. ஆதலின் நாம் சேர்ந்து இயன்ற அளவு இனிது நடத்த முயலுவோம்" என்று கருதி உடனே சேர்ந்தும் தக்கவாறு திருத்திக் தங்களுக்கும், நாட்டிற்கும் நன்மையைச்செய்ய முயலுவதே உரிமையும், கடமையுமாகும். அங்ஙனமின்றேல், அது 'கட்டிய வீட்டிற்குப் பழுதுகூறும் கடுமொழியாளர் செயலேயாம்' என அறிவுடையோரால் ஒதுக்கப்படுவதாம். "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்" என்பது வள்ளுவர் வாய்மொழி. "ஆயிரம் கோவிந்தம் போடலாம்; ஒரு தாதனுக்கிடல் கஷ்டமாம்" என்பது பழமொழி.

இவ்வளவு இடையூறுகளுக்கும் உட்பட்டு இம்முறையிற் கலந்துகொள்வதென்றே வைத்துக்கொள்வோம். அக்கால், அதிற்

சேர்தற்குரியாராவார் யாவர்? சேர்வதால் வரும்பயன் யாது? என்று கேட்கப்படலாம். அதற்கென விடையிறுக்க அடியேன் அதிகம் வருந்தவேண்டிய தில்லை. உலகில் எவரும் உண்ணுமலும், உடுக்காமலும் இருத்தல் முடியாது. நமது தொழில் முறையோ அவ்விரண்டிற்கும் வேண்டிய பண்டங்களைப் பகிர்ந்துகொள்வதே. ஆகவே, உண்ணலும், உடுத்தலும், செய்கின்ற ஆண் பெண் என்ற அனைவரும் அங்கத்தினராதற்கு உரியவரே. உலகினர்க்குச் "சங்கம் செய்வதைத் தங்கம் செய்யாது" என்ற ஒரு பழமொழி உண்டு. இத்தகைய தங்கத்திலும் மேம்பட்ட சங்கத்தின்பயனை அனுபவிக்காதவர் 'வாங்குவோர்' என்ற தகுதியிலுள்ள நாமே. பொருளாதாரநூலால் நிலச்சுவான்தார் சங்கம், முதலாளிகள் சங்கம், தொழிலாளிகள் சங்கம் என்பன கேட்கப்படுகின்றன. நிலக்கிழவர்களது நிலத்தாலும், முதலாளிகளின் முதலாலும், தொழிலாளிகளின் தொழிலாலும் உண்டு பண்ணப்படும் பொருள்களுக்குப் பொன்னைக் கொட்டிக்கொடுக்கும் வாங்குவோராகிய நமக்கு ஒரு சங்கம் வேண்டாமா? இன்னும் நாம் ஒரு சங்கமாகச் சோமல் நம்மை அந்தப் பொருளாதாரநூலின் "மறந்துபோன அதிகாரத்திற்கு உரியவர்" என்ற இழிந்த நிலைமையில் வைத்துக்கொள்ளலாமா? ஊன்றி நோக்குவார்க்கு வாங்குவோராகிய நம்மவராலேயே அம்முத்திறத்தினர்க்கும் பெரும்பயன் விளைகின்றது என்பதும், வாக்குவோர் என்ற நிலைமையில் நீங்கி எவரும் இருத்தல் முடியாது என்பதும் இனிது புலனும். இங்கே இவற்றிற்கு மேற்கோளாக,

"உலகம் இன்புறுதற் குறுதுணையாவது
நிலக்கிழ வர்தம் நிலனும் அன்றே
முதலா ளிகள்தரு முதலும் அன்றே
தொழிலா ளிகள்செய் தொழிலும் அன்றே
மற்றென்னோ வெனின் மலைக்கு வேண்டும்
சரக்குக் கென்றே தங்கந்தன்னைக்
கொடுத்து விலைக்குக் கொள்ளும் நிலையினில்
உள்ளகம் போன்றூர் உறுதியே யாகும்."

என்ற பாடற் பகுதிகளைக் கூறுவதே போதியதாம். அன்றியும், தரகர் முதலிய இடைக்கொள்ளைகளால் வரும் தீமையினின்றும் விலக இம்முறை தக்கதொருசாதனமாகும் என்பதும் தவறாகாது.

தொடரும்.

—————

இரகு வம்சம்.

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-1, பக்கம் 13)

பின்பு அஜன், இயற்கையான தைரியத்தையும் விட்டு, தழுதழுத்த குரலில் பிரலாபிக்கலானான்; அசேதனமான இரும்பும் தபிக்கும்பொழுது உருகுகின்றது; பிராணிகள் தபிக்கையில் உருகத் தடையென்ன:—"அந்தோ! மலர்களும் சரீரசம்பந்தத்தினால் ஆயுளை அழிக்கும்பொழுது, கொல்லவிரும்பும் 'விதி'க்கு மலரினும் வேறான வஸ்து ஆயுதமாக ஏன் ஆகாது? இல்லாவிடில், யமன் மிருதுவான வஸ்துவை மிருதுவான வஸ்துவினாலேயே கொல்லுகின்றான்; இவ் விஷயத்தில் பனிவிழுவதனால் அழிவுறும் தாமரை யோடை முதல் உதாரணம் (மலரால் மரணமுற்ற இந்துமதி இரண்டாவது திருஷ்டாந்தமாகும்) இம்மாலையே உயிரைப் போக்கும் பக்ஷத்தில், எனது மார்பினில் அதை வைத்துக்கொண்டும், அது ஏன் என் உயிரைப் போக்கவில்லை? கடவுளது விருப்பத்தினால் ஓரிடம் விஷமும் அமிருதமாகின்றது; மற்றோரிடம் அமுதமும் விஷமாகின்றது. அல்லது பிரம்மா எனது துர்ப்பாக்கியத்தினால் இம்மாலையையே இடியாக ஏற்படுத்தி விட்டான். ஏனெனில் இம்மாலையென்னும் இடி, மரத்தைப்போன்ற என்னைக் கொல்லாமல், விருக்ஷத்தில் படர்ந்த கொடியைக் கொன்றுவிட்டதே! காதலி! நான் அடிக்கடி பிழைகள் செய்தாலும், நீ என்னை அவமதிப்ப தில்லையே! அவ்வாறிருக்கையில் நீ இப்பொழுது குற்றமற்ற என்னோடு பேசாமலிருப்பதற்குக் காரணம் யாது? வெளுத்த புன்னகையுடையவளே! உனக்கு மறைவில் பிழைசெய்த நான் வெளிக்குமட்டும் பிரியமானவன் என்பது இப்பொழுது தெரிகிறது; ஏனெனில் நீ, என்னிடம் விடைபெற்றுக் கொள்ளாமலே இவ்வுலகிலிருந்து திரும்பிவாராத பதவியை அடைந்தனையன்றோ? இப்பாழும் உயிர், முதலில் இந்துமதியைத் தொடர்ந்து சென்றும், அவளைவிட்டு ஏன் திரும்பிவந்தது? அவ்வுயிர் தான் செய்த குற்றத்தினால் மிகுந்த துன்பத்தைத் தானே அநுபவிக்கட்டும். கல்வியில் சிரமத்தினாலேற்பட்ட வேர்வைத் துளிகள் உனது வதனத்தில் காணப்படுகின்றன; அவ்வாறிருந்தும் நீ அஸ்தமனத்தை அடைந்துவிட்டனை; ஆதலால் பிராணிகளின் பிறவி, ஸாரமற்றது; அது வெறுக்கத் தக்கதேயாம். நான் மனதினாலும் உனக்குத் தீங்கு செய்ததில்லை; எக்காரணத்தால் நீ என்னைவிட்டுச் சென்றனை? நான் பூதேவிக்குப் பெயரால் மட்டும் கணவன்; ஆனால், உண்மையான காதல் உன்னிடமே ஏற்பட்டிருந்தது.

* கரபம் போன்ற தொடைகளைப் பெற்றவளே!

காற்றானது மலர்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டதும், வளைந்ததும், நீலநிறமானதுமான நினது கூந்தலை அசைக்கும்பொழுது, என்மனம் நீ மீண்டும் உயிர்பெற்றெழுந்திருப்பாயோவென்று சங்கிக்கின்றது. காதலி! இரவில் 'ஓஷதி'யானது, பிரகாசத்தினால் 'இமய'மலைக்குகையிலுள்ள இருளைப் போக்குவதுபோல, நீ என் துக்கத்தை அறிவினால் போக்கவேண்டும். அசையும் கூந்தலையுடைய நினது முகம், யாதும் பேசாமையினால் என்னை வருத்துகின்றது; இவ்வதனம் இரவில் குவிந்ததும் உள்ளே சப்திக்காத வண்டுகளையுடையதுமான ஒரு தாமரை மலரைப்போலிருக்கின்றது. இரவு சந்திரனை மீண்டும் பெறுகின்றது; சக்கிரவாகப் பறவையை அதன் காதலி மறுபடியும் அடைகின்றது; அதனால் அவ்விருவரும் பிரிவைப்பொறுப்பர்; மீண்டும் திரும்பப்பெறாத நீ என்னை வருத்துவதில் தடையில்லை. புதிய தளிர்ப்படுக்கையில் படுத்தாலும் உனது மென்மைபொருந்திய உடல் வருந்துமே? ஹே சுந்தரி! அவ்வுடல் கட்டைகளிற்படுக்கும் துன்பத்தை எவ்வாறு பொறுக்கும்? உனது முதல் தோழியாகிய † மேகலை நீ இறந்ததைக்கண்டு, விலாஸத்தினால் யாதும் சப்திக்காமல் இருப்பதைப்பார்த்தால் அதுவும் நீ இறந்த துக்கத்தினால் இறந்துவிட்டதுபோலக் காணப்படுகின்றது. நீ, ஸ்வர்க்கத்திற்குச் செல்லுகையில், உனது பிரிவைப் பொறாத என்னைத் தேற்றுவதற்காகக் குயில்களிடம் இன்சொல்லையும், ராஜஹம்ஸங்களிடம் ‡ மந்தகமனத்தையும், மான்களிடம் சபலமான பார்வையும், காற்றினாலசையும் கொடிகளிடம் § விலாஸங்களையும் வைத்துச்சென்றனை; ஆயினும் அவைகள் உன்னைப் பிரிந்திருக்கும் என்னைத் தேற்றுவதற்கு வல்லமையுள்ளவன்று; ஆனால் அவை துன்பத்தையே தருகின்றன.

"அன்புடையோய்! கட்டுமா மரத்தையும் ஞாழல் கொடியையும் இரட்டையாகச் சேர்த்துவைத்த நீ, அவற்றிற்கு விவாகத்தை முடிக்காமல் செல்வது நியாயமா? || உனது காலால் உதைபட்டமையால் இவ்வசோகமரம் புஷ்பிக்கத் தொடங்கிவிட்டது; உனது

---

* கரபம் = மணிக்கட்டு; † மேகலை = ஒட்டியாணம்; ‡ மந்தகமனம் = மெதுவாய் நடத்தல்; § விலாசங்கள் = காதற்குறிப்புகள். || தாயைப்போன்ற உன்னை இழந்து விட்டதால் இனி அவைகளுக்குச் சுகமில்லை என்பது கருத்து.

கூந்தலுக்கு ஆபரணமாகும் அம்மலரை * நிவாபகர்மாவில் எவ்விதம் உபயோகிப்பேன்? அழகிய சரீரமுடையோய்! இவ்வசோகமரம், பாதஸரங்களால் சப்திக்கின்ற நினது பாதத்தின் துர்லபமான தாடனத்தை நினைப்பது போல, மலர்களென்னும் கண்ணீர்த் துளிகளை உதிர்க்கின்றது. கின்னரர் கழுத்தைப்போன்ற கண்டத்தையுடையவளே! நீ, உனது மூச்சுக் காற்றைப்போன்ற மணமுடைய மகிழ மலர்களால் என்னோடு சேர்ந்து பாதிகோத்த 'விலாஸமேகலை'யை முடிக்காமல் தூங்குவது தகுதியா? உனது தோழிமார்கள் சமமான சுகதுக்கங்களையுடையவர்கள்; இப்புதல்வனும் 'பிரதமா' சந்திரன் போல் இருக்கின்றனன்; நானும் காதல்மாறாதவனாயிருக்கின்றேன்; ஆயினும் உனது பிரிவானது உண்மையில் வருத்துகின்றது. இப்பொழுது எனது தைரியம் குறைந்துவிட்டது; சிற்றின்பப் பிரியமும் போய்விட்டது; 'கான'மும் ஆபரணப்பிரயோஜனமும் வீணாகிவிட்டன; படுக்கையும் சூன்னியமாகிவிட்டது. இந்துமதி எனக்கு மனைவியாயும், மந்திரியாயும், தனிமையில் தோழியாயும், வீணை முதலிய வாத்தியங்களை அப்பியசிப்பதில் மாணவியாயும் இருந்தனள்; கருணையற்ற விதி அவளை அபஹரித்து எனது உற்சாகம் முழுவதையும் கெடுத்தது. ஹே † மதிராக்ஷீ! நீ, என்வாயிலிருந்து வந்ததும், மிக வினிமையுள்ளதுமான மதுவைப் பருகிவிட்டு, கண்ணீர் கலந்தமையால் சூடுள்ளதும், பரலோகத்தில் கிடைக்கின்றதுமான 'ஜலாஞ்சலி'யை அநுபானமாகக் கொள்வது நியாயமா? அஜனுக்கு ஐசுவரியம் மிகுதியாயிருப்பினும், இந்துமதியின் பிரிவு ஏற்பட்ட பின்பு சுகமுண்டாகப் போகிறதில்லை; வேறு விஷயங்களுக்கு வசப்படாத அஜன், இந்துமதிக்கு வசமாயினன்; ஆதலால் இந்துமதியை இழந்தமையால் பிற விஷயங்களும் இழக்கப் பட்டவைகளே! என்று புலம்பினான்.

இவ்வாறு அஜன், இந்துமதியைக் குறித்துச்சோகரஸம்ததும்புமாறுப் புலம்பியதைக் கேட்டு, விருக்ஷங்களும் மகரந்த மென்னும் கண்ணீரைப் பெருகவிட்டன. பின்பு சுற்றத்தார், இந்துமதியை அஜன் மடியிலிருந்து சிரமப்பட்டு வெளிப்படுத்தி, அத் திவ்ய ஹாரத்தையே கடைசியணியாகச் செய்து, அகிற்கட்டைகளையும் சந்தனக் கட்டைகளையும் அடுக்கி, அவற்றில் இந்துமதியைக் கிடத்தித் தீவைக்கச் செய்தனர். "அஜன் அறிவாளியாயிருந்தும் சோ

* நிவாபகர்மா = உத்தரக்கிரியை, ஈமக்கடன். † மதிராக்ஷீ = சாராயம் போன்ற கண்களையுடையவள்.

கத்தினுல் மனைவியோடு இறந்தனன்" என்ற அபவாதத்திற்குப் பயந்து, இந்துமதியோடு சரீரத்தை அக்னியில் விடவில்லையேயன்றி உயிர் வாழ்வதில் விருப்பத்தினுலன்று.

பின்னர் சாஸ்திரங்களை யுணர்ந்த அஜன், குணங்களால் மட்டும் எஞ்சியிருக்கும் மனைவியைக் குறித்து, நகரத்தின் உத்யானவனத்தில் பத்து நாட்களுக்குப் பிறகு செய்யவேண்டிய கிரியைகளைச் சிறப்பாக நடத்தி முடித்தான். இந்துமதியைப் பிரிந்தமையால் இரவைப்பிரிந்த சந்திரனைப் போலிருக்கும் அஜன், பட்டணத்து ஸ்திரீகளின் கண்களில் நீர் ஆருய்ப் பெருகுவதைப் பார்த்துக்கொண்டே நகரத்தில் பிரவேசித்தனன். பின்பு யாகத்தில் தீக்ஷை செய்துகொண்டு, தனதாசிரமத்தில் வசிக்கும் வஸிஷ்டர், அஜன் துக்கத்தினுல் மோகமடைந் திருப்பதைத் தியானத்தினுலறிந்து, பின்வருமாறு தனது மாணவனைக்கொண்டு அஜனிடம் தெரியப்படுத்தினர் (வஸிஷ்டருடைய சிஷ்யன் சொல்லுகின்ருன்.)

ஹே ராஜ சிரேஷ்டா!

முனிவர் வேள்வியை முடிக்காமையினுல் நீர் மனைவி இறந்தமையால் வருந்துவதை யறிந்திருந்தும், நல் வழியிலிருந்து நழுவி நிற்கும் உம்மைத் தேற்றுவதற்குத் தானே நேரில் வரவில்லை; நல்லொழுக்கமுடையவனே! அம்முனிவர் இலகுவாகக் கோத்த பதங்களையுடைய சமாசாரம் என்னிட மிருக்கின்றது; சிறந்த தைரியமுடையவனே! அச் சமாசாரத்தைச் சொல்லுகிறேன் கேளும்!—அம்முனிவர் மூவ்வுலகங்களிலும் சென்றதும், இருப்பதும், வருவதுமான மூன்றையும் தடையற்ற ஞானக்கண்ணுல் அறிகின்றனர்; முன்னொரு சமயம் 'திருணபிந்து' முனிவர் கடுமையாகத் தவஞ் செய்தனர்; இந்திரன் அவரிடம் பயந்து தவத்தைக் கலைக்குமாறு 'ஹரிணி' யென்னும் தேவ ஸ்திரீயை அம்முனிவரிடம் அனுப்பினுன்; பின்பு முனிவர், எதிரில் மனேகரமாகக் கரணஞ்செய்து கூத்தாடும் தேவ ஸ்திரீயைக் கண்டதும், சாந்தியைவிட்டு, தவத்திற்கு இடையூருன கோபத்தை யடைந்து, "நீ பூலோகத்தில் மனுஷ்ய ஸ்திரீயாகப் பிறக்கக் கடவாய்" என்று அவளைச் சபித்தனர். உடனே ஹரிணி "ஹே பகவானே! நான் பிறருக்கு அதீனையானவள்; நான் செய்த பிழையைப் பொறுத்தருள வேண்டும்" என்று முனிவரைச் சரண மடைந்தனள்; அதற்கு அவர், "தேவஹார"த்தைப் பார்த்தவுடன் நீ சாபத்தினின்றும் விடுபடுவாய்" என்று கூறி

ளுர். அந்த 'ஹரிணி'யே 'போஜ' வம்சத்தில் பிறந்து உமக்குப் 'பட்டமகிஷி'யானவள் அவள், வெகு காலமான பிறகு ஸ்வர்க்கத்தி லிருந்து நழுவியதும், சாபநிவிர்த்திக்குக் காரணமுமான மாலையைப் பெற்றதும் இறந்தனள். ஆதலால் நீர் அவள் இறந்ததுபற்றி வருந்த வேண்டாம்; ஏனெனில், பிறந்தவர்களுக்கு இறப்பு நிச்சயமுண்டு.

"இனிமேல் நீர்பூமியைப் பரிபாலிக்கவேண்டும்; அரசர்கள் பூதேவியினாலேயே மனைவியைப் பெற்றவர்களாகின்றனர். மதமடையக்கூடிய காரணமிருந்தும், மதத்தையடைந்து துன்பமடையாத நீர், 'ஆத்மப்பிரதிபாதக'மான சாஸ்திரத்தை அப்பியசித்திருக்கிறீர்களன்றோ? மனதிற்குத் தாபமேற்பட்டிருக்கையில், தைரியத்துடன் அச்சாஸ்திரத்தை மீண்டும் சிந்திக்கவேண்டும். நீர் அழுவதனால் அவள் கிடைப்பளோ? 'அநுமரணம்' செய்தாலும் அவளைப்பெற முடியாது; பரலோகமடைந்த பிராணிகளின் * கதிகள் தத்தம் வினை வசத்தினால் வெவ்வேறு விதமாயுள்ளன; ஆனால் நீர், மனம்வருந்தாமல் பிண்டம் ஜலம் முதலியவற்றைக் கொடுத்து உமது மனைவியைத் திருப்தியடையுமாறு செய்யும்; ஏனெனில் மநு முதலியயோர், "பந்துக்கள் விருதியாகவிடும் கண்ணீர் இறந்தவரை எரிக்கு"மென்று கூறுகின்றனர். பிராணிகளுக்கு இறப்பது சித்தமாயுள்ளது; பிழைத்திருப்பதே அபூர்வம்; ஆதலால் பிராணி, க்ஷணப்பொழுதேனும் ஜீவித்திருந்தால், அவன் லாபமுள்ளவனன்றோ? துர்ப்புத்தியுள்ளவன், தனக்கு விருப்பமுள்ள வஸ்து நாசமடைந்தால், மனதில் தைத்த முளையைப்போல, பெருந்துக்கமாக எண்ணுகின்றான்; ஸ்திரபுத்தியுள்ளவன் பிரிய வஸ்துவின் நாசத்தையே மோக்ஷத்திற்கு வழியாக நினைக்கின்றனன்; தனது சரீரத்திற்கும் ஆத்மாவிற்கும் சேர்க்கையும் பிரிவும் ஏற்பட்டிருப்பது வேதத்தினாலேயே பிரசித்தமாயுள்ளது; ஆதலால், மனைவிமக்கள் முதலியோரின் பிரிவு அறிவாளியை வருத்துமா? சொல்லும்! இந்திரியங்களை ஜயித்தவர்களுள் முதல்வனே! நீர் † பாமர ஜனங்களைப்போல துக்கிப்பது தகுதியன்று; காற்று வீசும்பொழுது மரமும் மலையும் அசைந்தால் அவ்விரண்டிற்கும் எவ்விதம் பேத மேற்படும்?" என்று தெரிவித்தான்.

பின்பு அஜன், சிறந்தபுத்தியுள்ள வசிஷ்டருடைய வார்த்தையைச் சரியென்று அங்கீகரித்து, சிஷ்யரை அனுப்பிவிட்டான்;

---

* கதிகள் = நிலைமைகள். † பாமரஜனங்கள் = அறிவற்றவர்கள்.

ஆனால் அவ்வார்த்தை, மிகுந்ததுக்கமுள்ள அஜன் மனதில் இடைவெளியைப் பெறாமல் வஸிஷ்டர் சமீபத்திற்கே திரும்பிச்சென்றது போலாயிற்று; உண்மையாயும் இனிமையாயும் பேசுகின்ற அஜன், புதல்வன் சிறுவனாயிருந்த நிமித்தம், இந்துமதியின்* 'ஸாதிருசிய'த்தையும் †சித்திரத்தையும் காண்பதனாலும் கனவில் ஏற்படும் க்ஷணிகமான சேர்க்கைகளாலும் சிரமப்பட்டு எட்டுவருஷங்களைக் கழித்தான். ஆலின்முளை, மாளிகையைப் பிளப்பதுபோல, துக்கமென்னும் முளை, 'பலாத்கார'த்தினால் அஜனது மனதைப்பிளந்தது; அஜன், மரணத்திற்குக் காரணமாயும், வைத்தியர்களால் சிகித்ஸை செய்ய முடியாததுமான அத்துன்பமுளையைக் காதலியைப் பின்தொடர்வதினால் சிறந்தலாபமாக எண்ணினான்.

பின்னர் அஜன் இயற்கையாலும் செயற்கையாலும் வணக்கமுள்ளவனும் 'கவச' மணிந்தவனுமான 'தசரத'னுக்கு விதிப்படி பட்டாபிஷேகஞ்செய்து, பிரஜைகளைப் பரிபாலிக்குமாறு ஏவிவிட்டு, ரோகம் மிகுந்த சரீரத்தினால் துன்பப்படுவதை ஒழிக்கவிரும்பி, '‡பிராயோபவேசன'த்தில் புத்தியைச் செலுத்தினான். அப்பால் அஜன் 'கங்கை'யும் 'ஸரயூ'நதியும் சேருமிடத்தில் உடலைவிட்டு, உடனே தேவத்தன்மையைப்பெற்று, முன்னிலும் மிகுந்த மேனியுடைய காதலியோடு சேர்ந்து 'நந்த' வனத்தின் நடுவிலுள்ள கொடிப் பந்தல்களில் மறுபடியும் க்ரீடிக்கலாயினன்.

---

* ஸாதிருசியம் = பிறபொருள்களிடமுள்ள உவமை. † சித்திரம் — இந்துமதியின் பலவகையான படங்கள். ‡ பிராயோபவேசனம் = நீருணவின்றி யிருத்தல்.

(எட்டாவது ஸர்க்கம் முடிந்தது.)

By: M. M. Narayanasawmy Aiyer,
Mudikondan, P. O.
(via) Nannilam.

ஸ்ரீ ஜைன ஸித்தாந்த ப்ரவேசிகா.

(முன்தொடர்ச்சி-புத்தகம்-7, சஞ்சிகை-1, பக்கம்-5.)

46. ப்ர:—அனைகாந்திக ஹேத்வாபாச மென்றாலென்ன?

உத்:—எந்த ஹேது பக்ஷ, ஸபக்ஷ, விபக்ஷ ஆகிய இந்த மூன்றிலும் வியாபித்துக் கொண்டிருக்கிறதோ அதற்கு அனைகாந்திக ஹேத்வாபாச மென்று பெயர். உதா

ரணம்: இந்த மூலையில் புகை இருக்கிறது என்ற வார்த்தையில் அக்னித்வ மென்ற ஹேது பக்ஷ, ஸபக்ஷ, விபக்ஷ ஆகிய இந்த மூன்றிலும், வியாபித்துக் கொண்டிருப்பதனால் அதற்கு அனைகாந்திக ஹேத்வாபாச மென்று பெயர்.

47. ப்ர:—பக்ஷம் என்று எதற்குப் பெயர்?

உத்:—எந்த சாத்யத்தில் அஸ்தித்வத்தினுடைய நிச்சயமாகிறதோ அதற்கே பக்ஷமென்று பெயர். உதாரணம்: மேல் சொன்ன உதாஹரணைக்குள்ளிருக்கிற மூலை என்பது பக்ஷம்.

48. ப்ர:—ஸபக்ஷ மென்று எதற்குப் பெயர்?

உத்:—எந்த சாத்யத்தில் அஸ்தித்வத்தினுடைய நிச்சயமாகிறதோ அதற்கே ஸபக்ஷ மென்று பெயர். உதாரணம்: புகை ஸபக்ஷம் பச்சைக் கட்டையில் கூடிய நெருப்பு.

49. ப்ர:—விபக்ஷத்தினுடைய லக்ஷண மென்ன?

உத்:—எதில் சாத்தியத்தில் அபாவத்தி நிச்சயமாகிறதோ அதற்கு விபக்ஷ மென்று பெயர். உதாரணம்: அக்னியினின்றும் காய்ந்த இரும்புக் குண்டு.

50. ப்ர:—அகிஞ்சித்கர ஹேத்வாபாச மென்று எதற்குப் பெயர்?

உத்:—எந்த ஹேதுவில் எந்தக் கார்யசாத்திய சித்தியைச் செய்வதற்கு சமர்த்த மிருப்பதில்லையோ அதற்கு அகிஞ்சித்கர ஹேத்வாபாச மென்று பெயர்.

51. ப்ர:—அகிஞ்சித்கர ஹேத்வாபாசத்தில் எத்தனை பேதம்?

உத்:—இரண்டு: 1 சித்தசாதனம், 2 பாதிதவிஷயம்.

52. ப்ர:—சித்தசாதன மென்று எதற்குப் பெயர்?

உத்:—எந்த ஹேதுவினுடைய சாத்யம் சித்தமாய் இருப்பதோ அந்த ஹேதுவிற்கு சித்தசாதன மென்று பெயர். உதாரணம்: நெருப்பில் உஷ்ணத்வ மிருப்பது எப்படித் தொடுவதினால் அறியப்படுகிறதோ அது போல்வது.

53. ப்ர:—பாதித விஷய ஹேத்வாபாச மென்று எதற்குப் பெயர்?

உத்:—எந்த ஹேதுவினுடைய சாத்யத்தில் அன்ய ப்ரமாணங்களினால் பாதை வருகிறதோ அந்த ஹேதுவிற்கு பாதித விஷயமென்று பெயர்.

54. ப்ர:—பாதித விஷய ஹேத்வாபாசத்தில் எத்தனை பேதம்?

உத்:—ப்ரத்யக்ஷ பாதித, அனுமான பாதித, ஆகமபாதித, ஸ்வவசனபாதிதம் முதலான அநேக பேதமுண்டு.

55. ப்ர:—ப்ரத்யக்ஷபாதித மென்று எதற்குப் பெயர்?

உத்:—சாத்தியத்திற் குள்ளிருக்கிற எந்த ஹேதுவிற்கு, ப்ரத்யக்ஷபாதை வருகிறதோ அதற்கே ப்ரத்யக்ஷ பாதித மென்று பெயர். உதாரணம்: "அக்கினியில், சைத்யமிருக்கிறது" என்பது. எப்படி என்றால், அதிலும் திரவ்ய மிருக்கிறது. இதில் அக்னியை சாதனம் செய்துகொடுக்கிற, "சைத்ய" மென்கிற ஹேது, ப்ரத்யக்ஷபாதித மென்று சொல்லப் படும். (இன்னும் வரும்)

விருதூர். திரு. அப்பாண்டை நயினர்.
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர், ஆரணி.

நிஜமான சுகம் எது?

(முன்தொடர்ச்சி புத்தகம்-7, சஞ்சிகை-1, பக்கம் 3.)

நிஜமான மகா புருஷரைவிட்டு, (தீர்த்தங்கரர் கேவலிகளைவிட்டு) மிகுந்த மனுஷ்யர்கள் யாவரும், இகலோகத்திலேயே சுகமென்று பாவித்து "கானலை நீர் என்றெண்ணிக் கடுவெளி திரியுமான்போல்," அதாவது மானானது கானலையே தண்ணீர் என்று எண்ணி அலைந்தும், நீர் கிடைக்காமல் மாணடைந்தமாவதுபோல், சுகேச்சையின் நிமித்தம் அநேகவித கெட்டவேலைகளைச் சிந்தித்து கர்மமாகிற யம தூதனுடைய வலையில் விழுந்து மரணமடைகின்றனர். சிலர், காமினியினிடத்தில் சுகம் அகப்படுகிறதென்று அறிகின்றனர், இன்னும் சிலர் பஞ்சபக்வான்னங்களை நிஜமான சுகதாய மென்று கல்பனை செய்கின்றனர். இன்னும் சிலர், வெகு அமூல்யமான புதிய வஸ்திராலங்காரம் செய்துகொள்வதினாலே பரம சுகமென்று அறிகின்றனர். மற்ற சிலர், மோடார் முதலானவைகளில் தம்பெண்சாதி பிள்ளைகளோடு உட்கார்ந்து விலாசமாய்ப்போவதே பரமானந்த மென்று பாவனை செய்கின்றனர். இப்படி மனிதர்கள் இகலோக சுகத்தை நிஜமான சுகமென்று கல்பித்து அதன் நிமித்தம் உழன்று

கொண்டிருக்கின்றனர். ஆனால் இது லாஞ்சாஸ்பதமான எண்ணம், விஷய சேவனையினின்றும், இந்த மர்த்யலோகத்தில் நிஜமான சுகம் எவ்விதத்திலும் கிடைக்காது. எப்படி என்றால் விஷயங்களில் நிஜமான சுக மிருக்குமேயானால், விஷயமானது நம்மிட மிருக்கிறவரையில் பரமானந்தமாக வேண்டும். சர்க்கரையானது எப்பொழுதும் மதுரமாயிருக்கிற குணமுள்ளதாய் இருப்பதினின்றும், அதை எப்பொழுது தின்றாலும், எங்கே தின்றாலும், எவ்வளவு தின்றாலும், வேண்டுமானதைக் கடித்துக் கொண்டாலும், அது மதுரமாகவே காணப்படுகின்றது. அதைப்போல, விஷயத்தினுடைய குணமானது சுகம் கொடுப்பதாயிருந்தால், எந்நேரமும், எவ்விடத்திலும் அது சுகத்தை உண்டுபண்ணுவதாகவே இருக்கவேண்டும். மிஷ்டான்னமானது சுகத்தினுடைய உத்தேசமாய் இருக்கிறது. அதனுடைய சேவனையினின்றும் எப்பொழுதும் ஏகவிதமான ஆனந்தத்தை உண்டுபண்ணவேண்டும். ஆனால், அனுபவத்தில் ப்ரதிதினமும் பார்த்துக்கொண்டிருக்கிறோமல்லவா? வயிறு நிறைந்து விட்டதின் பிறகு பஞ்சாசத்துடன் யுக்தமான பஞ்சபக்வான்னங்களைக் கொண்டுவந்து முன்வைத்தாலும் அவற்றைப் பார்த்த உடன் வெறுப்புண்டாகின்றது. ஆனால் மனதைக் கெட்டிசெய்து சேவனைசெய்ய ஆரம்பித்தால் வயிற்றில் பாரமாகி, ஜடாக்னி கெட்டு அஜீர்ணத்தினின்றும் சுகத்திற்கு பதிலாய் துக்கமே சம்பவிக்கின்றது. அதிலும், அதிகமானால் மரணங்கூட சம்பவிக்கக்கூடும். ஆகையினாலே "மிஷ்டான்னம்கூட மிதமீறினால் மரணத்தைத் தருகிறது". சம்பத்து, வஜ்ரம், ரத்னம் முதலான வஸ்துக்கள் சுகத்தைக்கொடுப்பதானால் அரண்யத்தில், பிரவாசஞ்செய்து அதிகத் தண்ணீர்த்தாகமாய்த் தண்ணீர் தண்ணீர் கூழ்கூழ், என்று நெஞ்சுலர்ந்து போகும்படி இரைச்சலிடுகின்ற வழிப்போக்கனுக்கு அவை ஏன் சுகம் கொடுக்கக்கூடாது. ஆகையினாலே, இஷ்டமான பஞ்ச பக்வான்னங்களுடைய சேவையும் த்ரவ்யசம்பத்தும் சுகதாயகமில்லை என்று புலப்படுகின்றன. இதைப்போல பிரபஞ்சத்தில் திருஷ்டி கோசரமாகக்கூடிய வஸ்துக்களில், அதவா-சம்சாரத்தில் சுகமில்லை என்று ப்ரத்யக்ஷமாகின்றது.

(இன்னும் வரும்.)

விருதூர். திரு. அப்பாண்டை நயினர்.
அனந்தபுரம் ஸ்கூல் டீச்சர்,
ஜாகீர், ஆரணி.